சுடர் ஒளி
THE SUDAR OLI
சுடர் ஒளி
Registered as Newspaper
27.10.2020 செவ்வாய்க்கிழமை

## புதினம் தெரியுமோ?

வடக்கில டொக்டர்மார் சிலர் விடுற பிழையலால எல்லாருக்கும்தான் கெட்டபேர். டொக்டர்மாருக்கு சம்பளம், வாகன பெமிட் என்று சலுகைகளும் தாராளம். ஆனால் அவையில சில பேர்ர மனம், என்னதான் கிடைச்சாலும் ஓசியிலையும் ஏதாவது கிடைச்சா நல்லது என்றமாதிரி இருக்கு. அதுக்காக நோயாளிகளின்ர சாப்பாட்டில கை வைக்கிறது நல்லதில்லை. யாழ்ப்பாணத்தில நகரில இருந்து தொலைவில இருக்கிற 2

# ஒரேநாளில் மூவர் பலி!



**கொரோனா தாண்டவம்**

## கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 19 ஆக உயர்வு

*கொழும்பு, ஒக். 27*

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இன்று மாத்திரம் (மாலை வரை) மூவர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து இதுவரை இலங்கையில் கொரோனாவுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 19ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஜா -எல பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான ஆண் 2A




# முடக்க நிலைக்குள் குருநகர், பாசையூர்

**இறுக்கமான கண்காணிப்புகளும் நடைமுறை**

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27**

யாழ்ப்பாணம் குருநகர், பாஷையூர் பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன. நான்கு இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு இந்த முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2

## தூரப் பகுதி பேருந்துகளுக்கும் கொழும்புக்குள் நுழைய தடை

*கொழும்பு, ஒக். 27*

கொழும்புக்குள் வரும் தூரப் பகுதி பஸ் சேவைகளை இன்று முதல் மறு அறிவித்தலை வரை இடைநிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று கொழும்பிலும் மற்றுமொரு சமூகத்தொற்றாக உருவெடுக்கலாம் என்று அச்சம் நிலவுகின்றது. இதையடுத்து 2

மாநகர உறுப்புரிமை விவகாரம்:

## மணிவண்ணன் வழக்கு மீதான கட்டளை நாளை

*கொழும்பு, ஒக். 27*

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ௯ன் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விண்ணப்பம் மீதான கட்டளை நாளை வழங்கப்படும் 2

## கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண்பதற்கு புதியமுறை!

*கொழும்பு, ஒக். 27*

கொரோனா நோயாளர்களை கண்டறிவதற்கு சுகாதாரத் துறையினர் இன்னுமொரு முறையை அறிமுகப்படுத்தவுள்ளனர். நோயாளர்களை கண்டறிவதற்கு றெபிட் எண்டிஜன் டெஸ்ட் என்ற விரைவான பிறபொருள் 2

## பேலியகொட கொத்தணியில் 49 தொற்றாளர்கள்

*கொழும்பு, ஒக். 27*

பேலியகொட மீன் சந்தையுடன் சம்பந்தப்பட்ட கொரோனாக் கொத்தணி இணைப்பாளர்கள் எனக் கருதப்படும் நபர்களிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்புகளைப் பேணி இடங்களும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. (ம-இ)

## அதிக ஆபத்துப் பகுதியாக 27 பொதுசுகாதாரப் பிரிவுகள்!

*கொழும்பு, ஒக். 27*

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, 27 பொது சுகாதார ஆய்வாளர்கள் பிரிவுகளைநாட்டில்கொரோனா அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அறிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் ஏழு பிரிவுகளும், கம்பஹா மாவட்டத் 2

## கொரோனா சந்தேகம்: 18 பேர் தப்பி ஓட்டம்!

*கொழும்பு, ஒக். 27*

பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 18 பேர், தனிமைப்படுத்தலைத் தவிர்த்து சந்தைக்கு அருகில் உள்ள கழிவுநீர் கால்வாயில் குதித்துத் தப்பிச் சென்றுள்ளனர். இவ்வாறு தப்பிச் சென்றவர்களைப் பிடிப்பதற்காக 2

# நாட்டை முடக்கப்போவதில்லை

*கொழும்பு, ஒக். 27*

கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்ததுடன், ஜனாதிபதி இது குறித்து அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். மேலும், கொரோனா 2

## கொரோனாத் தொற்றாளர்களை.....

எதிரியாக்கி பரிசோதனை முறைமையை மேற்கொள்வது தொடர்பில் சுகாதாரத் துறையினர் அவதானம் செலுத்தியுள்ளனர். எதிர்காலத்தில் பி.சி.ஆர் பரிசோதனையை மாத்திரம் மேற்கொண்டு நோயாளர்களை கண்டறிவதில் மட்டுப்பாடான நிலைமை இருப்பதனால், இந்தப் பரிசோதனை முறைமையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இம்முறை மூலம், 15 அல்லது 20 நிமிடங்களில் முடிவுகளை விரைவாக அறியமுடியுமெனவும் இதனால் தொற்றுப் பரவல் தொடர்பாக இலகுவாக அறியமுடியுமெனவும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர். (ம-இ)

## முடக்க...

குருநகரில் இருந்து பேலியகொடவுக்குச் சென்றுவந்த இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று மாலை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதிகள் கொரோனா கொத்தணியாக உருவெடுக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது.
குருநகர் மக்களின் இயல்பான வாழ்வியல் முறை, அங்கிருக்கக்கூடிய சன நெருக்கடி ஆகியவற்றைக் கருதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய மக்களும் பெரும் அச்சத்துக்கு உட்பட்டுள்ளனர். இந்த நிலையில் வெளிநபர்கள் எவரும் குருநகர் மற்றும் பாஷையூருக்குச் செல்ல முடியாதவாறும், அங்கிருக்கக்கூடியவர்கள் வெளியில் செல்ல முடியாதவாறும் முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து அந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (ம-26)

## புதினம் தெரியுமோ

**மருத்துவமனையில, நோயாளர்களின் சாப்பாட்டுக்காக கொள்வனவு செய்யிற மரக்கறியில கொஞ்சம் அங்கத்தையான் பொறுப்பு மருத்துவர் வீட்டுக்கும் போகுதாம். இதைக் கண்டு பிடிச்சாலும் அவருக்கு எதிரா எந்த நடவடிக்கையும் எடுபடேல்ல. இதெல்லாத்தையும் விட கிளிநொச்சியில மருத்துவமனை ஒண்டில கொரோனாக் காலத்தில டொக்டர்மார், நோயாளிகளின்ர சாப்பாட்டோட தங்கட சாப்பாடும் செய்தது என்று ஒன்றரை லட்சத்துக்கு பில் கொடுத்திருக்கினம். நோயாளிகளுக்கு வழமையான சாப்பாடு. டொக்டர்மாருக்கு ஸ்பெசல் சாப்பாடு. ஆனா, பில் நோயாளிகளின்ர சாப்பாட்டுக் கணக்கில போடுபட்டிருக்கு. இதுக்கு அப்பூறவல் தரச் சொல்லி அமைச் சிலையும், பிரதம செயலரிட்டையும் டொக்டர்மார் கேட்டவையாம். ஆனா அவை அதுக்கு மசிஞ்சு கொடுக்கேல்ல. நோயாளிகளின்ர சாப்பாட்டில டொக்ரர்மார்ர சாப்பாட்டு பில்லை சேர்கேலாது. வேணும் எண்டா அவை தங்கட காசில போட்டுக்கட்டட்டும் எண்டு சொல்லிப் போட்டினயாம். கொரோனா காலத்தில தாங்கள் வெளியில போகேலாம போனதாலதான் நோயாளிகளின்ர சாப்பாட்டோட தங்கட சாப்பாட்டையும் சமைச்சம் எண்டு இப்ப அவை கதையளக்கினம். இப்பிடி இன்னும் நிறைய இருக்கு. சந்தர்ப்பம் வரேக்க ஒவ்வொன்றா சொல்லுறன்.**

**-பட்சி**



## தூரப் பகுதி பேருந்துகளுக்கும்...

கொழும்பில் பல்வேறு இறுக்கமான கட்டுப்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே கொழும்புக்குள்வரும்தூரப்பகுதி பஸ் சேவைகளை இன்று முதல் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## சுகாதார சேவைகளுக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

கொழும்பு, ஒக். 27
புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக களுபோவில மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அசோல குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ம-இ)

## கொரோனா சந்தேகம்:...

பொதுசுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இவர்களில் தமது தவறை உணர்ந்துகொண்ட சிலர் அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்புக்கொண்டு, தம்மை மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். ஏனையவர்களும் தீவிரமாகத் தேடப்படுகின்றனர். (ம-இ)

## நாட்டை...

வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழமையான பொருளாதார நடவடிக்கைகள் தொடருவதற்கு அனுமதிப்பது எனவும் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கடந்த முறையை விட இம்முறை கொரோனா வைரஸ் பரவல் வேகமாக பரவுகின்றது எனவும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்கள் அனைவரும் சுகாதார அதிகாரிகளினால் முன்மொழியப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாழ்வதே சிறந்த தீர்வு எனவும் அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது. (ம-இ)

## அதிக ஆபத்து....

தில் 19 பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகரசபை பகுதிகள், நுகேகொட, பத்தரமுல்ல, கொலன்னாவ, கஹாதுடுவ, மொரட்டுவ மற்றும் கடுவெல ஆகியவை அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன.
கம்பஹா மாவட்டத்தில் ராகம, மினுவாங்கொட, வத்தளை, திவுலபிட்டிய, ஜா எல, ஏக்கல, கட்டான, சீதுவ, கம்பஹா, அத்தனகல, வேயங்கொடை, களனிய, மஹர, தொம்பே, பூகொட, மீரிகம, பியகம, நீர்கொழும்பு மற்றும் கட்டுநாயக்க ஆகிய இடங்கள் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன. (ம-இ)

## மணிவண்ணன் வழக்கு...

என்று யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் தவணையிட்டது.
அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது.
அதனடிப்படையில் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வெறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது. தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார்.
மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.
தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.
இந்த மனு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து நாளை புதன்கிழமை கட்டளை வழங்கப்படும் என்று நீதிபதி தவணையிட்டார். (ம-26)

# சமூகத்தொற்று இல்லை!

கொழும்பு, ஒக். 27
இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் இன்னும் சமூகப்பரவல் என்ற கட்டத்துக்கு வரவில்லை என தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், வைத்தியருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கையின்போது தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் வைத்திய நிபுணர்களால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அரசு முடிவுகளை எடுக்கின்றது.
வைரஸ் தாக்கம் சமூகப்பரவல் என்ற கட்டத்துக்கு இன்னும் வரவில்லை என அவர்கள் கூறுகின்றனர். அடையாளம் காணப்படும் தொற்றாளர்களுக்கு வைரஸ் எவ்வாறு பரவியது என்பதை இனம்காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, நேரடி சமூகத் தொற்று இல்லை. ஒளிப்பதற்கு இங்கு ஒன்றும் இல்லை' என்றார்.
அதேவேளை, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் தனிமைப்படுத்தல் நிலையங்கள் வைத்தியர்களின் கண்காணிப்பின்கீழ் சிகிச்சை மையங்களாக மாற்றப்படும் எனவும் அவர் கூறினார். (ம44)

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# அமெரிக்க படைமுகாமுக்கு இலங்கையில் இடமில்லை!

## கொழும்பை வொஷிங்டன் பகைக்காது என்று இலங்கை அரசு நம்பிக்கை

கொழும்பு, ஒக். 27
இலங்கையில் அமெரிக்காவின் படைமுகாம் அமைவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் அதற்கான எந்தவொரு உடன்படிக்கையிலும் அரசு கைச்சாத்திடாது எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.
இதன்போது, இலங்கையில் அமெரிக்காவின் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கான நோக்கிலேயே இராஜாங்கச்செயலாளர் இங்குவருகிறார் என முன்னதாக நீங்கள் அறிவிப்பு விடுத்திருந்தீங்கள், அந்த நிலைப்பாட்டிலா இன்றும் இருக்கின்றீர்கள் என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் உதயகம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கடந்த அரசு 'சோபா' உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தது. அதற்கு நாம் உள்ளிட்ட பல தரப்புகள் எதிர்ப்பை வெளியிட்டதால் அது தடுத்துநிறுத்தப்பட்டது. எமது அரசாங்கம் சோபா உடன்படிக்கையிலோ அல்லது எம்.சி.சி ஒப்பந்தத்திலோ கைச்சாத்திடாது, எனவே, அவ்வாறானதொரு அச்சுறுத்தல் இல்லை. கை தட்டுவதற்கு இரு கரங்கள் அவசியம். ஆக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு இரு நாடுகளின் இணக்கப்பாடும் அவசியம், அவ்வாறானதொரு தேவை அமெரிக்காவுக்கு இருந்தாலும், இலங்கைக்கு இல்லை. அமெரிக்க இராஜாங்கச்செயலாளரின் இலங்கை பயணத்தின்போது கூட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படமாட்டாது.
கடந்த ஆட்சியின்போது நாட்டுக்கு அச்சுறுத்தல் இருந்தது. இதனை உணர்ந்ததாலேயே மக்கள் எமது அரசுக்கு ஆணை வழங்கினர். அதன்பிரகாரமே நாம் செயற்படுவோம். இலங்கையானது அனைத்து நாடுகளுக்கும் முக்கியத்துவமிக்கதாகும். எனவே, இலங்கையுடன் நட்புறவின் அடிப்படையிலேயே அமெரிக்கா செயற்படும் என நம்புகின்றோம். இலங்கையுடன் மோதல் போக்கை கடைபிடித்தால் அது உபகமார்க்கமாக அந்நாட்டுக்கே நஷ்டம் என ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன' என்றார். (ம-44)

# ஒரேநாளில்...

ஒருவர் இன்று காலை உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் இன்று பகல் உயிரிழந்துள்ளனர்.
கொழும்பு மாவட்டம், வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரும், கொம்பனித்தெருவைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணுமே பலியாகியுள்ளனர்.
இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 13 பேர் ஆண்களாவர். 6 பேர் பெண்களாவர்.
கொரோனாத் தொற்றால் ஒரே நாளில் மூவர் உயிரிழந்துள்ளமை நாட்டு மக்களைப் பேரச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.
அதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றது. ஆனால், அரசோ கொரோனா இன்னமும் சமூகத் தொற்றாக மாறவில்லை எனவும், அது கொத்தணிப் பரவல் நிலையில் மட்டுமே உள்ளது எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

# கொரோனா விழிப்புணர்வு

மன்னார், ஒக்.27
நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றை அடுத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்நிலையில் மன்னார் புதிய பஸ் நிலையத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களுக்கும் கொரோனா விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது.
மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் மன்னார் மாவட்ட போக்குவரத்து பொலிஸார் இணைந்து இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளனர். (ஐ-213)

# மன்னாரில் இருவர் குணமடைவு

மன்னார், ஒக்.27
மன்னாரில் கொரோனா தொற்றுக்குள்ளான 11 பேரில் இரண்டு பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் தெரிவித்துள்ளார்.
மன்னார் மாவட்டத்தில் கொரோனா நிலவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் முதல் இன்று வரை (நேற்று) 11 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மினுவாங்கொடை கொரோனா தொற்றுகையில் தொடர்புடைய ஒன்பது பேர் மன்னார் பட்டித் தோட்டம் பகுதியிலும், பேலிய கொட மீன் சந்தைத் தொகுதியில் கொரோனாத் தொற்றுகையுடன் தொடர்புடைய இருவரும் அடையாளம் காணப்பட்டனர்.
இதேவேளை கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இன்று வரை (நேற்று) 995 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த 11 தொற்று உடையவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் 11 பேரில் இரண்டு பேர் சிகிச்சை நிறைவு பெற்று இரணவில மருத்துவமனையில் இருந்து குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர் என்றார். (ஐ-213)

# ரிஷாத்தின் பிணை நிராகரிப்பு நவம்பர் 10 வரையில் மறியலில்

கொழும்பு, ஒக். 27
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்கு எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, நீதிவான் குறித்த உத்தரவை வழங்கினார். இதன்போது அவரது சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, மீள்குடி யேற்ற அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன், 222 இ.போ.ச. பஸ்கள் மூலம் இடம்பெயர்ந்த வாக்காளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றதன் மூலம் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் அரசுக்குச் சொந்தமான குறித்த அமைச்சின் கீழிருந்த ரூபா 95 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை சுயவிருப்பின் பேரில் பயன்படுத்தியன் மூலம் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில், 1981ஆம் ஆண்டு இலக்கம் 15 ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 82 (1) பிரிவுக்கு அமைய குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

# பயணத்தடை தொடர்ந்தாலும் எதற்கும் அச்சப்படமாட்டேன்

## இராணுவத் தளபதி பளார் பதில்

கொழும்பு, ஒக். 27
'நான் எதற்கும் அஞ்சும் நபர் கிடையாது, அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை நீக்கப்பட்டாலும், நீக்கப்படாவிட்டாலும்கூட எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை' என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.
அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் குறுகியகால பயணமொன்றை மேற்கொண்டு இன்றிரவு இலங்கைக்கு வரவுள்ளார். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அவர் சந்திப்புகளை நடத்தவுள்ளார். இதன்போதே இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் அவரின் குடும்பத்தி னருக்கு அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை நீக்குமாறு இலங்கை அரசின் சார்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.
இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியவை வருமாறு,
'நான் வெளிப்படையானவன். எதற்கும் அஞ்சும் நபர் கிடையாது. அவ்வாறு அஞ்சியிருந்தால் இவ்வாறு துணிகரமாக செயற்பட்டிருக்கவும் மாட்டேன், வன்னி மனிதாபிமான நடவடிக்கையின்போது நான் என்ன செய்தேன், எனதுகீழ் இருந்த படையணி எவ்வாறு செயற்பட்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அதிக வெற்றிகளை எமது படையணியே பெற்றது. அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் இலங்கை வருகிறார். அவருடனான சந்திப்பின்போது எனக்கும் எனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை நீக்குமாறு அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. இது விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு முன்பிருந்தே ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு இதுவிடயத்தில் அதிக கவனம் செலுத்திவருகின்றது. பயணத்தடை நீக்கப்படா விட்டால் அது எனக்கும், எனது குடும்பத்துக்கு மட்டுமே பிரச்சினையாக அமையும். நாட்டுக்காக சேவையாற்றியதற்காக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அது எனக்கு பெரிய பிரச்சினையாக அமையப்போவதும் இல்லை' என்றார். (ம-44)

# சமூகத் தொற்று இன்னும் இல்லை

## தொற்று நோயியல் நிபுணர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.27

கொவிட் -19 தொற்று இதுவரை சமூகத்தில் பரவவில்லை என தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதான தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற கொவிட் 19 பரவல் தொடர்பில் அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணி மிகப்பெரியது. இதனாலேயே நாடு பூராகவும் அனைத்து பிரதேசங்களிலும் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கொவிட் 19 தொற்று சமூகப் பரவலாக ஏற்பட்டிருக்குமானால் தொற்றாளர்களுக்கு இடையில் தொடர்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறான நிலை நாட்டினுள் இது வரை பதிவாகவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், அனைத்து தொற்றாளர்களும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணியுடன் தொடர்புபட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டினுள் சிறந்த சுகாதார அமைப்பு காணப்படுவதால் கொவிட் 19 நிலைமைக்கு முகம்கொடுக்க மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய இயலுமை உள்ளது.

தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்விதத்திலும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)



## நிதி நிறுவனத்தினுள் பெண்ணுக்கு கத்திக்குத்து

ஹொரவபொத்தான நகர் பகுதியில் உள்ள தனியார் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றினுள் வைத்து பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனது கணவருடன் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றிற்கு வருகை தந்த இப்பெண் நிதி நிறுவனத்தினுள் நின்றபோது இனம் தெரியாத நபர் ஒருவர் நிதி நிறுவனத்துக்குள் உட்புகுந்து கத்தியால் குத்தியுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

## பொலிஸார் 17 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.27

பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 17 பேருக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுள் 10 பேர் பொலிஸ் விஷேட அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் சுமார் 400 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலும் சிலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(க-இ)




## தனிமைப்படுத்தப்பட்டது ஹற்றன்

ஹற்றன், ஒக்.27

ஹற்றன் நகரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக மாற்றப்பட்டுள்ளது என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி, மீள் அறிவித்தல் வரையில் இது நடைமுறையில் இருக்கும் எனவும், கொரோனா தொற்றுநோயைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ந-இ)

(தொடர்புடைய செய்தி 6ஆம் பக்கத்தில்)

## ஊரடங்கு மீறல் : கைது 46



கொழும்பு, ஒக்.27

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேர காலப் பகுதிக்குள் 46 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தக் காலப் பகுதியில் 7 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 1,122 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 163 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ந-இ)

# இந்திய மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

இராமேஸ்வரம்,ஒக்.27

இந்தியா இராமேஸ்வரம் மீனவர் மீது, இலங்கைக் கடற்படையினர் கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சுமார் 400 க்கும் குறைவான விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி ஆதம்பாலம் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை விரட்டிய டித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை மீன்பிடித்துவிட்டு கரை திரும்பிய நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீது, கற்கள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என்று மீனவர் கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு கொரோனா



கொழும்பு, ஒக்.27

டாம் வீதி பொலிஸ் நிலையத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை நடத்துநர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸ் நிலையத்தில் சேவை புரியும் 12 அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தற்போது டாம் வீதி பொலிஸ் நிலையம் முடக்கப்பட்டுள்ளதுடன், தொற்று நீக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)




## புறக்கோட்டைக்குள் நுழைய வேண்டாம்

கொழும்பு,ஒக்.27

புறக்கோட்டை ரயில் நிலையம், பஸ் தரிப்பிடத்துக்கு, நடந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளு மாறு, பொலிஸார் அறிவுறுத்தியுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இந்தப் பகுதிக்குள் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், ரயில்களும், பஸ் நிலையங்களும் சேவையில் ஈடுபடாது.

எனவே குறிப்பிட்ட நிலையங்களுக்கு நடந்துச் செல்வது, ஊரடங்கு உத்தரவை மீறுவதாகக் கருதப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (க-இ)

## புதிய வைத்தியசாலைகள் கம்பஹாவில் நிர்மாணம்

கொழும்பு, ஒக்.27

வேகமாக பரவி வரும் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க கம்பஹா மாவட்டத்தில் இரு புதிய வைத்தியசாலைகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மிகாரா எபா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், வாதுபிட்டிவாலாவில் அமைந்துள்ள இளைஞர் மன்றம் மற்றும் கம்பஹா பொது வைத்தியசாலைக்கு அருகில் புதிய வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைகளின் கட்டுமானப் பணிகள் இலங்கை இராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படை யினரால் மேற்கொள்ளப்படும் என்றும், கட்டுமானத்தை விரைவில் முடிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (ந-இ)



# தொற்றாளர்களை என்ன செய்வது?

### ஆராயும் மருத்துவர்கள்

கொழும்பு,ஒக்.27

கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படும் அனைவரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட வேண்டுமா?.அதே போன்று அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டியவர்களா? என்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

வைரஸ் பரவலைக் கருத்தில் கொண்டு இந்த விடயங்கள் ஆராயப்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், மருத்துவமனைகளில் இடவசதி இல்லை.

அதேபோன்று தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள இட வசதியும் போதாது.

அதற்கமைய மருத்துவமனைகளில் அனுமதித்தல் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப வேண்டியவர்களைப் பிரித்து தெரிவுசெய்வதற்கு அவசியமான முறை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

நாட்டில் உள்ள வளங்களுக்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## துறைமுகங்களில் தேங்கியுள்ள மீன்கள் விநியோகத்தில் சிறப்பு நடவடிக்கைகள்

கொழும்பு, ஒக்.27

மீன்பிடி துறைமுகங்களில் தற்போது சேகரித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை உரிய மீன் சந்தைகளுக்கு அல்லது பல பகுதிகளுக்கு விநியோகம் செய்தல் தொடர்பிலும் குறித்த மீன்களை உரிய சந்தைகளுக்கு கிடைக்கச் செய்வதற்கான சிறப்பு சுகாதார வழிமுறைகளை உள்ளடக்கியும் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல பகுதிகளிலும் மீன்பிடித் துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன. அத்துடன் சில பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்துவது தொடர்பில் இன்னும் எந்த முடிவுகளும் எடுக்கப்படாதுள்ள காரணத்தால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை சந்தைகளுக்கு விநியோகிப்பதற்காக இந்த சிறப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது பூரண சுகாதார நடைமுறைகள் குறித்து சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விரைவில் உள்ளூர் சந்தைகளில் மீன்களை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## உடல் சூட்டை அளவிட இராணுவப் படையணி

கொழும்பு, ஒக்.27

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, இராணுவத்தின் விசேட மோட்டார் சைக்கிள் படையணி குழுவினர் கொழும்பு நகர எல்லைக்குள் மக்களின் உடல் வெப்பநிலையை அளவிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இத் தகவலை கொவிட் 19 தொற்று பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ விசேட மோட்டார் சைக்கிள் படையின் 2 குழுக்கள் கொழும்பு மாநகர எல்லைக்குள்ளும் ஏனைய 3 குழுக்கள் கிராண்ட் பாஸ் பிரதேசத்திலும் இவ்வாறு உடல் வெப்பநிலையை பரிசோதிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## 22 பொலிஸாருக்கு பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, ஒக்.27

நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த 22 பொலிஸ் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை இன்று மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளவது குறித்து சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளன என சார்ஜென்ட் அட் ஆர்ம்ஸ் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இன்று ஸ்ரீ ஜெயவர்தனபுர நாடாளுமன்ற வளாகத்தை மூடிவிட்டு தொற்று நீக்கம் செய்யத் தீர்மானித்துள்ளனர். தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர், நாடாளுமன்றம் நாளை தனது பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-இ)

# வெளிவிவகார கொள்கையிலிருந்து விலகினால் இலங்கை தோல்வியடையும்

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.27

இலங்கை நடுநிலையான வெளிவிவகார கொள்கையிலிருந்து விலகமுற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தோல்வியைச் சந்தித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் வலுவான நாடுகளின் செல்வாக்கின் மையத்தில் இலங்கை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல தரப்பினர் தற்போது இலங்கையை மோதல் களமாக மாற்ற விரும்புகின்றனர். அதனை நாங்கள் தவிர்க்க வேண்டும். இலங்கை ஒரு அணிசேரா நாடாகவும் பக்கச் சார்பற்ற நாடாகவும் ஆதிக்கம் செலுத்துவதற்கான விளையாட்டிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

வெளிவிவகார கொள்கையிலிருந்து இலங்கை விலகிய ஒவ்வொரு தருணமும், தோல்வி அடைந்தமை மட்டுமன்றி அதன் முன்னேற்றம் குறைவடைந்து உள்நாட்டு மோதல்களிலும் சிக்குண்டது. ஒரு நாட்டுக்கு பதில் இன்னொரு நாட்டை தெரிவு செய்யும் நிலையில், இலங்கை இல்லை என்றார். (ற-இ)

# காந்திநகர் காட்டில் உள்ளூர் துப்பாக்கி மீட்பு


மட்டக்களப்பு, ஒக்.27

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காந்திநகர் காட்டுப் பகுதியில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக பயன்படுத்தக்கூடிய நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் கட்டுத் துப்பாக்கியையே நேற்று திங்கட்கிழமை மாலை வவுணதீவு பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி இன்று நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ந-இ)

# 'மாஸ்க்'கின் பாதுகாப்பு 4 மணிநேரமே



## பொதுச் சுகாதார சிறப்பு மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.27

முகக் கவசங்களை அதிக பட்சம் 4 மணித்தியாலங்கள் மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பொது சுகாதார சிறப்பு மருத்துவர் உத்பலா அமரசிங்க தெரிவித்துள்ளார.

4 மணித்தியாலங்களில் பயன்படுத்திய பின்னர் அகற்றப்படும் முகக் கவசத்தை பாதுகாப்பாக அகற்றி குப்பை தொட்டியில் போட வேண்டும். பின்னர் புதிய முகக் கவசம் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். வேலைக்கு செல்வோர், அத்தியாவசிய தேவைக்காக வெளியில் செல்வோர் இந்த நடைமுறையை கட்டாயம் பின்பற்ற வேண்டும்..

அகற்றும் முகக் கவசத்தை குப்பை தொட்டியில் போடுங்கள். ஆங்காங்கே போடுவதால் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துக்கள் அதிகம். முகக் கவசம் அணியும் போது வாய் மற்றும் மூக்கு முழுமையாக மூடும் வகையில் அணிவது கட்டாயம். முகக் கவசத்தை சரியான வகையில் பயன்படுத்தவில்லை என்றால் தொற்றுள்ள ஒருவரிடமிருந்து கொரோனா பரவும் ஆபத்து உள்ளது.

நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதென்றால் மேலதிகமாக இரண்டு முகக்கவசங்களைக் கொண்டு செல்வது கட்டாயமாகும். அது உங்கள் சுகாதார பாதுகாப்புக்கு நல்லது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# கடலோரப் பாதை ரயில்களுக்கு நேர அட்டவணை

கொழும்பு, ஒக்.27

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடலோரப் பாதையில் இயங்கும் ரயில்களுக்கான நேர அட்டவணை அறிவிக்கப்பட்டுள் ளது.

அதன்படி காலி, அளுத்கம, களுத்துறை வடக்கு, பாணந்துறை மற்றும் பெலியட்ட ஆகிய இடங்களிலிருந்து பல ரயில்கள் இயக்கப்படும்.

அந்தப் பயணம் கொள்ளுப்பிட்டியுடன் நிறைவடையும்.இந்த ரயில் சேவைகள் காலையிலும் மாலையிலும் முன்னெடுக்கப்படும். களனி பள்ளத்தாக்கு பாதையில் ரயில்கள் நாரஹேன்பிட்டி வரை இயக்கப்படும் என்றும் புத்தளம் ரயில் சேவை வைக்கால் வரை இயக்கப்படும் என்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது. (ந-இ)

# மருந்துகள் விநியோகம்: இரண்டாம் கட்டம் இன்று

கொழும்பு, ஒக்.27

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில், அரசாங்க வைத்தியசாலை கிளினிக்குகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு அவர்களது வீடுகளுக்கே மருந்துகளை விநியோகிக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அரச வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவுகளின் ஊடாக சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தபால் ஊடாக மருந்துகளை வழங்கும் இரண்டாவது கட்ட நடவடிக்கையே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் வெளி நோயாளர்களுக்கு, நாளை முதல் மருந்துகள் தபால் மூலமாக வீடுகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. நோயாளர்களின் மருந்தகப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ள முகவரிக்கு மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளன. எனினும் நோயாளிகளின் முகவரிகளில் மாற்றங்கள் இருப்பின் வைத்தியசாலைக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு மாற்றிக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)



# பொம்பியோவுக்கு எதிர்ப்பு ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.27

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக்கல் பொம்பியோ, இலங்கைக்கு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணியினர் கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (க-இ)

# அருங்காட்சியகங்கள் அனைத்துக்கும் பூட்டு

கொழும்பு,ஒக்.27

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அருங்காட்சியகங்களும் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை, சீகிரியா, கதிர்காமம், காலி மற்றும் கண்டி உள்ளிட்ட மத்திய கலாசார நிதித் திட்டத்துக்குக் கீழ் பராமரிக்கப்படும், அனைத்து அருங்காட்சியகங்களும் இவ்வாறு மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

# தனிமைப்படுத்தலில் 35,000 பேர்

கொழும்பு, ஒக்.27

நாடளாவிய ரீதியில் 35,000 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

மேலும் கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து இதுவரை 185,000 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.
கொரோனா வைரஸ் பரவலைத் தவிர்ப்பதற்காக, தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது. சம்பந்தப்பட்ட இடங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள் விசேட அறிவித்தல்களை ஒட்டுவதன்மூலம் இதனைக் கண்காணித்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (நஇ)

# இரட்டைக் குடியுரிமை விவகாரம் ஜனாதிபதிக்கு ஆத்திரமூட்டியது!

## அரச தரப்பு எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27

இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் அரசியலில் ஈடுபட அனுமதிக்கும் அரசமைப்பு விதிகளை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை ஆத்திரமூட்டியது என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களில், நாட்டை நேசிக்கும் மற்றும் நாட்டுக்காக சேவையாற்ற விரும்புவோரும் உள்ளனர் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார். 20 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விதிகள் சமீபத்தில் நாடாளுமன்ற வாக்கெடுப்பைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையை கைவிட்ட போது அவர் சந்தித்த அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டிய தாகவும் வீரசுமன வீரசிங்க மேலும் குறிப்பிட்டார்.(ற-இ)

# நாட்டை முடக்கும் நிலை ஏற்படலாம்

## பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.27

மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சிலவேளை முழு நாட்டையும் முடக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். சுவிஸ்சர்லாந்தின் இலங்கைக் கான தூதுவர் டொமினிக் ஃபர்க்லர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். இதன் போதே, பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். .

இச் சந்திப்பின்போது இரண்டு நாடுகளுக்கு இடையிலான முதலீடுகள், ஏற்றுமதி சுற்றுலாத்துறை மற்றும் கொவிட் 19க்கு எதிரான செயற்பாடுகள் ஆகியன தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (ந-இ)



# ஹற்றனில் மேலும் 10 பேருக்கு கொரோனா

நுவரெலியா, ஒக்.27

நுவரெலியா ஹற்றன் பகுதியில் மேலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஹற்றன் டிக்கோயா நகர சபைத் தலைவர் ச.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஹற்றன் மீன் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவரோடு தொடர்புடைய 23 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதில், இந்த நபரின் குடும்பத்தினர் நால்வர் உட்பட மேலும் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து ஹற்றன் நகரை முழுமையாக மூடி, கிருமித் தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ற-இ)

# பல இடங்களில் மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, ஒக்.27

வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். (ந-இ)

# பி.சி.ஆர். பரிசோதனை செய்தவர்களுக்கும் தொற்று

கொழும்பு,ஒக்.27

பேலியகொட மீன் சந்தையில் கொவிட்19 தொற்றுத் தொடர்பில், பி.சி.ஆர் பரிசோதனை நடாத்திய உத்தியோகத்தர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த 9 உத்தியோகத்தர்களுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான பொதுச் சுகாதார பரிசோதகர் ருவான் விஜேமுனி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொவிட்-19 தொற்றுக்கு இலக்காகிய உத்தியோகத்தர்களும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(க-இ)



# 40 மஞ்சள் மூடைகள் படகிலிருந்து மீட்பு

கொழும்பு, ஒக்.27

இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்ற ஆயிரம் கிலோ அடங்கிய 40 மஞ்சள் மூடைகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடியிலிருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்ற மஞ்சள் மூடைகளே இவ்வாறு நடுக்கடலில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

பாம்பன் பாலம் கடல் வழியாக வெளிமாவட்ட படகு ஒன்றில் இலங்கைக்கு கடத்தல் பொருள்கள் அனுப்பப்படவுள்ளதாக மெரைன் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்தே இந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

பாம்பன் லைட்ஹவுஸ் அருகே நடுக்கடலில் உரிய பதிவு எண் இல்லாத நாட்டுப் படகு ஒன்று நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. இதனைக் கண்ட மெரைன் பொலிஸார் படகைச் சோதனை செய்தனர். அந்தப் படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக மஞ்சள் மூடைகள் படகில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கடத்தல்காரர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர் என்றும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் மெரைன் பொலிஸ் ஆய்வாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார். (ற-இ)

# விவசாயிகளால் மரங்களுக்கு தீவைப்பு

## குற்றம் சாட்டுகின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்

கொழும்பு, ஒக்.27

வனாதவில்லுவில் உள்ள பரண எலுவங்குள பகுதியில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் அமைந்துள்ள பல மரங்களுக்கு விவசாயிகள் திட்டமிட்டவகையில் தீவைத்து எரித்து அழித்துள்ளனர் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறு எரிக்கப்பட்ட மரங்களில் 100 ஆண்டுகளுக்கும் மேலான கும்புக் மரங்களும் அடங்குகின்றன. காட்டு விலங்குகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு வருவதைத் தடுக்கவே இந்த மரங்களை எரிப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மேலும் தெரிவித்தனர்.

சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த விளைநிலம் வில்பத்து தேசிய பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ளது. பூங்காவில் உள்ள பறவைகள் விவசாய நிலத்தில் அமைந்துள்ள பிரமாண்டமான மரங்களை முட்டையிடுவதற்கு பயன்படுத்துகின்றன.விவசாயிகளும் விவசாய நிலத்தின் ஒரு பகுதியின் சட்டபூர்வ உரிமையை கொண்டிருக்கவில்லை என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# அமெரிக்க இராஜதந்திரிகள் தனிமைப்படுத்தப்படார்

கொழும்பு,ஒக்.27

அமெரிக்காவில் இருந்து வரும் ராஜதந்திரிகளை இலங்கையில் 14 நாள்கள் தனிமைப்படுத்தும் அவசியமில்லை என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் மிக வேகமாக கொரோனாத் தொற்று அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அங்கிருந்து இலங்கை வரும் ராஜதந்திரிகளைத் தனிமைப்படுத்தும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்று ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விக்கு அவர் இந்தப் பதிலை அளித்தார். 24 மணி நேரத்துக்குள் ஒரு சிலரை சந்திக்கவே அவர்கள் வருகின்றனர் என்பதால், அவர்களைத் தனிமைப்படுத்தும் அவசியமில்லை. இவர்கள் தமது நாட்டில் இருந்து புறப்படும் முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்துக்கொண்டுள்ளனர். இவர்கள் இலங்கை வந்த பின்னரும், சுகாதார துறையினர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

கிழக்குக் கடல் பரப்பில் கப்பல் ஒன்றில் தீ பிடித்த போது, ராஜதந்திர ரீதியில் செயற்பட்ட விதம் இதற்கு சிறந்த உதாரணம். தனிமைப்படுத்தல் என்பது நோய் பரவுவதைத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை. இந்த ராஜதந்திரிகள் ஊடாக கொரோனா பரவாது என்ற நம்பிக்கையில் அவர்கள் வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



# தடுப்பூசிகளின் பயன்பாட்டை நிறுத்தியது சிங்கப்பூர்

சிங்கப்பூர் சிட்டி, ஒக்.27
தென்கொரியாவில் தடுப்பூசி ஏற்றப்பட்ட பலர் உயிரிழந்ததை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரண்டு இன்புளுவன்ஸா தடுப்பூசிகள் இரண்டின் பயன்பாட்டை சிங்கப்பூர் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.
மேலும் தடுப்பூசிகளின் பயன்பாட்டை நிறுத்துமாறு பகிரங்கமாக அறிவித்த முதல் நாடுகளில் ஒன்றாக சிங்கப்பூர் அமைந்துள்ளது.
பருவ கால காய்ச்சலைத் தடுப்பதற்காக தென் கொரியாவில் இலட்சக்கணக்கான மக்களுக்கு தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு வருகிறது.
சனிக்கிழமை நிலவரப்படி அவர்களில் குறைந்தது. 48 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் இந்த உயிரிழப்பு சம்பவங்களுக்கும் செலுத்தப்பட்ட தடுப்பூசிக்கும் எதுவித நேரடித் தொடர்பும் இல்லை எனக் கூறும் தென்கொரியா, தடுப்பூசித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்றும் தெரிவித்துள்ளது. (வ-இ)

# குஷ்பு கைது

நடிகை குஷ்பு சிதம்பரம் தொகுதியில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதை அடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்து பெண்களை குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக திருமாவளவன் மீது குற்றச்சாட்டு எழுந்து வரும் நிலையில் திருமாவளவனை கண்டித்து பாஜக மகளிரணி சார்பில் நடிகை குஷ்பு மற்றும் சசிகலா, புஷ்பா ஆகியோர் போராட்டம் செய்ய திட்டமிட்டிருந்தனர்.

இந்தநிலையில் தடையை மீறி போராட்டம் நடத்த சென்ற குஷ்பு வழியிலேயே வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அறிகுறியற்ற தொற்றாளர்கள் திணறும் சீனா

பீஜிங், ஒக்.26
சீனாவின் சிஞ்சியாங்கின் வடமேற்கு பிராந்திய நகரமான காஷ்கரில் 137 புதிய அறிகுறியற்ற கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று கண்டறியப்பட்டுள்ளனர்.
சீனாவின் பிரதான நிலப்பரப்புகளில் 10 நாட்களின் பின்னர் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவாகும்.
ஞாயிற்றுக்கிழமை காஷ்கரில் கண்டறியப்பட்ட அனைத்து கொரோனாத் தொற்றாளர்களும் ஒரு ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களும், அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டவர்களும் ஆவர். இந் நிலையில் நாட்டின் வடமேற்குப் பகுதியில் புதிய கொரோனாப் பரவலைத் தடுக்க சீன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (வ-இ)

# கொரோனாவால் செவித்திறன் பாதிப்பு



கொவிட்19 பெருந்தொற்றை விரட்டும் வழிகளைக் கண்டறிந்து கொண்டிருக்கும் வேளையில், அதன் தீவிரமும் அதிகரித்துக் கொண்டே போவது கவலையளிக்கிறது. தொற்றுக்குப் பிறகு, பல்வேறு பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. அதன் வரிசையில் தற்போது செவித்திறன் இழப்பும் சேர்ந்துள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு நபருக்கு கொவிட்19 தொற்றுக்குப் பிறகு, செவித்திறனில் பாதிப்பு ஏற்பட்டு காது கேட்காமல் போய்விட்டது. இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வு முடிவும் தொற்றுக்கும், நிரந்தரமாகக் காது கேட்கும் திறனை இழப்பதற்கும் தொடர்பு உள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வு முடிவும் மருத்துவ இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 45 வயது ஆண் ஒருவர் கொவிட் சிகிச்சைக்குப் பிறகு, செவித்திறனை இழந்துவிட்டார் என்று இங்கிலாந்திலுள்ள காது மூக்கு தொண்டை மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். அவருக்கு ஏற்கெனவே ஆஸ்துமா பிரச்னையும் இருந்திருக்கிறது. இந்நிலையில் கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட அந்த நபர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு வாரம் சிகிச்சைக்குப் பிறகு உடல்நலம் தேறிய நிலையில், சுவாசிப்பதற்கு செலுத்தப்பட்ட டியூப் நீக்கப்பட்டது. தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து சென்றவரின் இடது காதில் இரைச்சல் சத்தம் கேட்பது போன்று தோன்றியிருக்கிறது. தொடர்ந்து சட்டென்று இடது காது கேட்காமல் போய்விட்டது. மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கருத்துபடி, கொவிட்19 பாதிப்புக்கு முன் அவருக்கு காதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆஸ்துமா பிரச்சினையைத் தவிர, அவருக்கு வேறு எந்தப் பிரச் சினையும் இல்லை. மிகவும் ஆரோக்கியமாகவே இருந்திருக்கிறார்.

அவர் செவிப்பாதையை ஆராய்ந்தபோது அதில் அடைப்போ அழற்சியோ தென்படவில்லை. காது கேட்கும் பரிசோதனை செய்து பார்த்தபோது இடது காது கேட்கவில்லை. இதன் அடிப்படையில் செவித்திறன் பாதிக்கப்படுவதும் கொவிட்19 தொற்றுக்குப் பிந்திய விளைவாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோருக்கு இந்தப் பிரச்னை ஏற்படுவது கண்டறியப்படாமல் போவதற்கும் வாய்ப்புள்ளது. எனவே, சிகிச்சை பெறும் நோயாளிகளின் செவித்திறன் குறித்தும் மருத்துவர்கள் பரிசோதிக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு 79லட்சத்தைக் கடந்தது

புதுடில்லி, ஒக்.27
இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை 79 இலட்சத்தைக் கடந்துள்ளது.
மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் மொத்த எண்ணிக்கை 79 இலட்சத்து 9 ஆயிரத்து 959 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 71 இலட்சத்து 37 ஆயிரத்து 228 பேர் குணமடைந்துள்ளனர், 6 இலட்சத்து 53 ஆயிரத்து 717 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை கொரோனா வைரஸால் உயிரிழந்தோரின் மொத்த எண் ணிக்கை ஒரு லட்சத்து 19ஆயிரத்து 14 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# சேகரித்த பாறைத் துகள்களை இழந்து வரும் விண்கலம்

நாசா விண்கலமான ஓரிசிஸ்-ரெக்ஸ் அது சேகரித்த பாறைத் துகள்களை இழந்து வருகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பூமியிலிருந்து மில்லியன் கணக்கான கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பென்னு எனும் குறுங்கோளுக்கு மாதிரி பாறைத் துகள்களை எடுப்பதற்கு இந்த விண்கலம் அனுப்பப்பட்டது

60 கிராம் மாதிரிகளே தேவைப்பட்டபோதும் அது சுமார் 400 கிராம் துகள்களை எடுத்த நிலையில், கல் ஒன்று விண்கலத்தின் கதவில் மாட்டிக்கொண்டுள்ளது. கதவு சரியாக மூடப்படாத நிலையில், குறுங்கோளின் மாதிரித் துகள்கள் விழுகின் றன. எவ்வளவு துகள்கள் இழக்கப்பட்டுள்ளன என்பது குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை.

மாதிரி துகள்களைச் சேகரிக்கும் பணி யில் உள்ள குழுவினர், தற்போது எஞ்சிய பாறைத் துகள்களை பாதுகாக்க முயற்சியெடுத்துள்ளனர். 2016ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட இவ் விண்கலம் 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பூமிக்குத் திரும்பவுள்ளது. (வ-இ)

# மீண்டும் நேருக்கு நேர் ஹைதராபாத்- டெல்லி

புதுடில்லி, ஒக்.27

டுபாயில் இன்று இரவு நடைபெறும் ஐ.பி.எல் தொடரின் 47 ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும், டெல்லி கபிடல்ஸ் அணியும் மோதுகின்றன.

இந்த 2 அணிகளும் ஐ.பி.எல் தொடர்களில் 16 ஆட்டங்களில் நேருக்கு நேர் சந்தித்துள்ளன. அவற்றில் ஹைதராபாத் 10 ஆட்டங்களிலும், டெல்லி 6 ஆட்டங்களிலும் வென்றுள்ளன. இரு அணிகளும் கடைசியாக மோதிய 10 ஆட்டங்களில் தலா 5 முறை வெற்றி தோல்விகளைச் சந்தித்துள்ளன.

நடப்புத் தொடரில் 29 ஆம் திகதி நடந்த லீக் போட்டியில், ஹைதராபாத் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தியது. நடப்புத் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.




டெல்லி 14 புள்ளிகளுடன் தகுதிச் சுற்று வாய்ப்புக்கான பட்டியலில் தொடர்கிறது. எஞ்சிய 3 ஆட்டங்களில் 2 போட்டிகளில் வென்றால் தகுதிச்சுற்று வாய்ப்பை உறுதிப்படுத்தலாம். அதற்கு மாறாக 3 போட்டிகளிலும் தோற்றால் தகுதிச்சுற்று வாய்ப்பு கேள்விக்குறிதான். ஏனென்றால் ஹைதராபாத் உட்பட பல அணிகள் 14 புள்ளிகள் பெறும் வாய்ப்பில் நீடிக்கின்றன. அதனால் இன்றைய போட்டியில் மட்டுமல்ல இனிவரும் போட்டிகளிலும் அதிக ஓட்டங்கள், இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது 2 அணிகளுக்கும் மிக முக்கியம். (ற)



## கார்ப் பந்தயத்தில் ஹாமில்டன் முதலிடம்!

லிஸ்பன், ஒக்.27

பார்முலா1 கார்ப்பந்தயத்தின் 12 ஆவது சுற்றான போர்த்துக்கல் கிராண்ட்பிரி சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹாமில்டன் முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா1' கார்ப் பந்தயம், 21 சுற்றுகளாக நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறுகிறது.

இதன்படி, நடப்பு ஆண்டின் 12 ஆவது சுற்றான போர்த்துக்கல் கிராண்ட்பிரி சுற்று போர்டிமாவ் சர்வதேச ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தப் பந்தயத்தில் 306.826 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர். இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹாமில்டன் பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 29 நிமிடங்கள் 56.828 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்துள்ளார். (ற)



## ஐ.பி.எல் 'பிளே ஓவ்' திகதிகள் அறிவிப்பு

புதுடில்லி, ஒக்.27

நடப்பு ஐ.பி.எல் தொடரின் லீக் சுற்றுக்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தகுதிச்சுற்று போட்டியான பிளே ஓவ் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் திகதிகள், களங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஐ.பி.எல் தொடர் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் நிலையில், போட்டி ஆரம்பித்த போது லீக் மற்றும், இறுதிப்போட்டிக்கான திகதிகள் மட்டும் அறிவிக்கப்பட்டன. பிளே ஓவ் நடக்கும் திகதிகள், களங்கள் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் பிளே ஓவ் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டன.

அதன்படி முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் மோதும்' தகுதிச் சுற்றுப்போட்டி1'நவம்பர் 5 ஆம் திகதி டுபாயில் நடைபெறும். அதே போன்று 3 ஆவது, 4 ஆவது இடங்களை பிடித்த அணிகளுக்கான'வெளியேற்றும் சுற்றுப் போட்டி'நவம்பர் 6 ஆம் திகதி அபுதாபியில் நடைபெறவுள்ளது.

முதல் தகுதிச் சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்த, வெளியேற்றும் சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் மோதும் 'தகுதிச் சுற்றுப்போட்டி2' அபுதாபியில் நடைபெறவுள்ளது. தகுதிச்சுற்றுப் போட்டி 1, 2 இல் வெற்றி பெற்ற அணிகள் மோதும் இறுதிப் போட்டி ஏற்கனவே திட்டமிட்டபடி நவம்பர் 10 ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. (ற)

## தந்தையின் மந்திர சொல் உருகிய மன்தீப் சிங்

புதுடில்லி, ஒக்.27

ஐ.பி.எல் தொடரில் 100 ஓட்டங்களை அடித்தாலும் 200 ஓட்டங்களை அடித்தாலும் ஆட்டமிழக்காமல் விளையாடும்படி தன்னுடைய தந்தை தனக்கு தொடர்ந்து அறிவுறுத்தினார் என மன்தீப் சிங் தெரிவித்துள்ளார. இந்தநிலையில் நேற்றைய கே.கே.ஆர் அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களை அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார் பஞ்சாப் அணியின் மன்தீப் சிங். இதன்மூலம் அந்த அணி ஐ.பி.எல் 2020 புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மன்தீப்பின் தந்தை கடந்த சனிக்கிழமை மரணமடைந்துள்ள நிலையில், அவர், சொந்த ஊருக்கு செல்லாமல் தொடர்ந்து விளையாடி வருகிறார். இந்த நிலையில் நேற்றைய போட்டியில் 49 பந்துகளில் அரைசதத்தை பூர்த்தி செய்த அவர், வானத்தை பார்த்து, தன்னுடைய தந்தைக்கு அந்த அரைசதத்தை அர்ப்பணித்தார். (ற)



# ஆஸி. சுற்றுப் பயணத்துக்கு இந்திய அணியில் 32 வீரர்கள்

### கிரிக்கெட் சபை ஆலோசனை

புதுடில்லி, ஒக்.27

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள, 32 வீரர்கள் அடங்கிய மெகா இந்திய அணியை தேர்வு செய்யுமாறு கிரிக்கெட் சபை தேர்வுக் குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வரும் ஐ.பி.எல் ரி20 தொடர் முடிந்த பின்னர், விராட் கோலி தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியா சென்று ஒருநாள், ரி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட திட்டமிட்டுள்ளது. நவம்பர் மாதம் தொடங்கி 2021 ஜனவரி வரை நடைபெறவுள்ள இந்த சுற்றுப் பயணத்தில் இந்திய அணி 3 ஒருநாள், 3 ரி20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக, கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் இருக்கின்றமையால் இந்தத் தொடர்களுக்கான இந்திய அணியில் மொத்தம் 32 வீரர்களைத் தேர்வு செய்யுமாறு தேர்வுக் குழுவினருக்கு பி.சி.சி.ஐ தரப்பில் இருந்து ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

தொடரின் இடையே எவருக்காவது தொற்று அல்லது காயம் ஏற்பட்டு விலக நேரிட்டால், மாற்று வீரரை உடனடியாக அனுப்புவது கடினம் என்பதால் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு வகை போட்டிக்குமான விசேட வீரர்களும் இந்த மெகா அணியில் இடம் பெறுவார்கள். இவர்களுடன் அணி நிர்வாகிகள், உதவியாளர்கள் என்று மிகப் பெரிய குழுவினர் ஆஸ்திரேலியா செல்ல உள்ளனர். எனினும், வீரர்களின் குடும்பத்தினருக்கு அனுமதி இல்லை. (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 27.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.